1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 100 பம்புசெட்டுகளுக்கு ஒரு மெக்கானிக் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனால் 3, 4 யூனியன்களை இவர் கவனிக்க வேண்டியிருந்ததால், சிரமம் இருந்தது. 100 பம்புசெட்டுகளுக்குக் குறைவாக இருந்தாலும், இரண்டு ஒன்றியங்களிலுமுள்ள பழுதுபட்ட பம்பு செட்டுகளைப் பார்த்தால் போதும் என்று அரசு உத்தரவிடப் பட்டுள்ளது. அப்படி வந்த பிறகு இப்போது 99 சதவீதமும் நல்ல முறையில் ரிப்பேர் செய்யப்பட்டு நன்றாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜன் வாய்க்கால் பாலம்.

* வினா 500—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், குறிச்சி பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள ராஜன் வாய்க்கால் பாலத்தினை சீர் செய்திடும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.

வந்தவாசி—கள்ளக்குறிச்சி பேருந்துப்பணி.

* வினா 501—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப் பணியினை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப்பணி தொடர்ந்து நடைபெறுவதால், மீண்டும் துவக்கச் செயற்குறிப்பு என்ற வினாவுக்கு இடமே இல்லை.

[1978 மார்ச் 1]

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலும் டவுன் பஸ்களில் பெண்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்குகின்றார்கள். அதே போல் துரித வண்டிகளில் தனியாகப் பெண்களுக்கு என்று இடம் ஒதுக்கவில்லை, போர்டும் இல்லை. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல யோசனையை அரசு பரிசீலித்து செயல்படுத்த முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை பணியாளரது முறையீடுகள்.

* வினு 502—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணல்மேட்டில் உள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரியும் பர்மா அகதிகள் 2—8—1977-ம் நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு ஏதேனும் தந்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மேல் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்.

(ஆ) விவரமான அறிக்கை* சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, அகதிகளாக இருந்து தாயகம் திரும்பியிருக்கின்றவர்கள் பணியில் அமர்த்தப்படும் போது, அவர்கள் தற்காலிகமாக அமர்த்தப்படுகின்றார்களா அல்லது நிரந்தரமாக அமர்த்தப்படுகின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*[1058-1059ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS